திரு. பெ. சீனிவாசன் : தலைவரவர்களே, இது நிரந்தரமாக இருக்கக்கூடிய ஒரு குழுவாக இருப்பதால், அதற்கு ஏற்படக் கூடிய நிர்வாகச் செலவுகளுக்கு தொழில் ஸ்தாபனங்கள் பங்கு தரவேண்டுமென்று அரசாங்கம் உத்தரவிட்டிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவரவர்களே, அப்படிப் பட்ட கருத்து எதுவும் இல்லை.

Extraction of fish oil

* 23 *Q*.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Social Welfare be pleased to state—

(*a*) whether industries are functioning in (i) Private and (ii) Public Sector for extracting fish oil in this State; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. சி. வி. எம். அண்ணாமலை : தமிழ்நாட்டில் மீன் எண்ணெய் எடுப்பதற்கான தனியார் தொழிற்சாலைகள் எதுவும் செயல்பட்டு வரவில்லை. கடலூர், அதிராமபட்டினம், அம்மாபட்டினம், பாம்பன், தூத்துக்குடி, புன்னக்காயல், பெரிய தாளை போன்ற இடங்களில் பொதுத் துறையில் அரசுத் துறை யைச் சேர்ந்த சுறா மீன் எண்ணெய் ஆலைகள் சில உள்ளன. இந்த இடங்களில் சுறாமீன்களின் ஈரலிலிருந்து சுறா மீன் எண்ணெய் (பக்குவப்படுத்தாதது) எடுக்கப்படுகிறது. வைட்டமின் ஏ, டி, செறிந்த பக்குவப்படுத்தாத சுறாமீன் எண்ணெய் கள்ளிக் கோட்டையிலுள்ள, கேரளா சோப்பு, எண்ணெய் நிறுவனத்திற்கு விற்கப்படுகிறது.

திரு. என். டென்னிஸ் : தலைவரவர்களே, மருத்துவ உபயோகம் உள்ள இந்த மீன் எண்ணெய் சாதாரண மக்களுக்கும் குறைந்த விலையில் கிடைப்பதற்கு ஏற்ப பல இடங்களில் பப்ளிக் செக்டார் மூலம் தேவையான தொழிற்சாலைகளை ஏற்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. வி. எம். அண்ணாமலை : தலைவரவர்களே, அரசாங்கத்தில் ஏற்படுத்துவதற்குரிய சாத்தியக் கூறுகள் இப் போது இல்லை.

1974 ஆகஸ்ட் 12]

திரு. க. உரொ. எட்மண்ட்: தலைவரவர்களே, தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளில் சுறு மீன் எண்ணெய் தயாரிக்கப்படுவதாக அமைச்சரவர்கள் தன்னுடைய பதிலில் சொன்னார்கள். சுறு மீன் எண்ணெய் ஒரு ஆண்டில் எத்தனை மாதங்கள் தயாரிக்கப் படுகிறது? ஏனென்றால், சுறு மீன் எப்போதும் கிடைப்பதில்லை. எல்லாக் காலங்களிலும் தொழில் நடைபெற, சுறு மீன் கிடைக்காத காலங்களில், அந்தக் காலங்களில் எந்தப் பகுதியில் கிடைக்கும் என்று கண்டறிந்து, மீன் பிடிப்பதற்கு ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. வி. எம். அண்ணாமலை: தலைவரவர்களே, அதுபற்றி விளக்கமான குறிப்பு இல்லை என்றாலும் தற்போது எந்த அளவுக்கு சுறு மீன் எண்ணெய் எடுக்கப்பட்டு வருகிறது என்ற குறிப்பை மட்டும் தெரிவிக்கிறேன்.

1957-58-ல்	24.182 பவுண்ட்.
1958-59-ல்	25.229
1959-60-ல்	35.267
1960-61-ல்	48.394

இதுபோன்ற அளவில் உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது.

திருமதி த. ந. அனந்தநாயகி: சார், ஏதோ புள்ளிவிபரங்களை அமைச்சரவர்கள் சொன்னார்கள். இதை எந்தக் கணக்கில் எடுத்துக்கொள்வது? டன் கணக்கில் எடுத்துக்கொள்வதா அல்லது கிலோ கணக்கில் எடுத்துக்கொள்வதா? அதைச் சொன்னால் புரிந்துகொள்ளலாம்.

மாண்புமிகு திரு. சி. வி. எம். அண்ணாமலை: நான் முதலிலே சொன்னவற்றில் முதல் மூன்று ஆண்டுகள் (அதாவது, 1957–58 முதல் 1959–60 வரை) பவுண்ட் கணக்கு அதற்குப் பின்னால் சொன்னது (அதாவது 1960–61) கிலோ கணக்கு.

செம்பனார்கோவில் பகுதியில் மீன் வளர்ப்புத் திட்டம்.

*24 வினா—**திரு. அ. தேவேந்திரன்:** மாண்புமிகு சமூக நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மாயூரம் வட்டம், செம்பனார்கோவில் பகுதியில் உள்ள ஆறுபாதி ஓடையை ஆழப்படுத்தி மீன் வளர்ப்புக்கு ஏற்றதாகச் செய்யும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?